

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2024) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசர் மகன் எஸ்.ஆர்.டி. சாய் விஷ்ணு மேகா ஆகாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில்

# சென்னை முப்பெரும் விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

## பொன் கௌதம சிகாமணி தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், செப். 15-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடை பெற்றது. மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை பெருக்கும் வகையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பயணமாக அமெரிக்கா சென்று பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு வெளிநாட்டு முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்த்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நன்றியும் தெரிவிப்பது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை விழுப்புரம் தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது.

செப்டம்பர் 17ம் தேதி அன்று சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டத்திலிருந்து கழக துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் தலைமையில் பெருந்திரளாக கலந்து கொள்வது.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கிளை மற்றும் வார்டுகளிலும் கழக கொடி ஏற்றி அதன் விவரங்களை மாவட்ட கழகத்திற்கு தெரிவிப்பது.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிலும் கழக அரசு சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவது.

உலக செஸ் சாம்பியன் ஷிப் போட்டியை வெற்றிகரமாக நடத்தியதை தொடர்ந்து தற்போது உலக அளவிலான ஃபார்முலா 4 கார் ரேஸ் பந்தயத்தை சென்னையில் வெற்றிகரமாக நடத்தி உலக அளவில் விளையாட்டு வீரர்கள், விளையாட்டு அமைப்புகள் மற்றும் விளையாட்டு ரசிகர்கள் கவனத்தை ஈர்த்து தமிழ்நாட்டை உலக அரங்கில் விளையாட்டில் சிறப்பாக இடம் பிடிக்கும் வகையில் வளர்த்து எடுத்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வது என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக பவள விழாவினை கழக கொடி பறக்காத வீடுகளே இல்லை என்ற வகையில் நாம் அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள் வணிக வளாகங்களில் கழகக் கொடியேற்றி கொண்டாடுவது.

**சிறப்பு தீர்மானங்கள்**

கழக பவள விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி அவர்களின் பெயரில் முப்பெரும் விழாவில் மு.க.ஸ்டாலின் விருதை அறிவித்த தலைமை கழகத்திற்கு விழுப்புரம் க தெற்கு மாவட்டம் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கலைஞர் விருதை வழங்கிய கழக தலைவர் அவர்களுக்கும் தலைமை கழகத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வது என நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களை வரவேற்று, விளக்கி உயர்க்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எழுச்சியுரையாற்றினார் .

கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ, மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம் தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், கோ.பாஸ்கரன், அப்துல் சலாம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன் நன்றியுரை யாற்றினார்.

### பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் – சைதை கிழக்குப் பகுதி

# பொது உறுப்பினர்கள் கூட்டம்: அமைச்சர்கள் கே.என். நேரு - மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் – கோ.வி.லெனின் – எஸ்.குணசேகரன் – வாசுகி பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, செப். 15 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் 13.09.2024 வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. வளாகத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் தலைமையில் நடைபெற்து. இதில் பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி ஆகியோர் முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள் தா.மோகன்குமார் எம்.சி., நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், மு.இராஜா, க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், வே.முருகன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என். நேரு, மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு கழகத்தினருக்கு ஆலோசனை வழங்கி பேசினர். மேலும் கூட்டத்தில் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு. மகேஷ்குமார், தொகுதி மேலிட பார்வையாளர் கோ.வி.லெனின், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் பொது உறுப்பினர் கூட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வாசுகி பாண்டியன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று உரை நிகழ்த்தினர்.

மேலும் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத் மின்னல் கந்தப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோட்டூர் எஸ். பிரகாஷ், மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், ஜி.செல்வராஜ், எஸ்.ராதாகிருஷ்ணன், என்.நந்தகோபால், எஸ்.ஜெ.சலாம், க.உமாபதி, இரா.சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன், ஜி.யோவான், ஏ.மஜீத், வே. ரமேஷ்குமார்,

மாவட்ட அளவிலான அணிகளின் நிர்வாகிகள் ஆர்.டி மூர்த்தி, மேகலா ஜெயவேல், கே.எஸ்.பாபு, ஆர்.செல்வம், எஸ்.எம்.மோகன்தாஸ், ஜெ.வி. பிரதாப், என்.சுதாகர், கா.வேல் முருகன், பி.செல்வம், ஜா. அகஸ்டின், எ.கௌதம், சே. அருண், ஈ.மதனசேகரன், விக்டர், பென்னி கிளமண்ட், எஸ். கரிமுல்லா, ஏ.சுப்பிரமணி, ஏ. துரைராஜ், எஸ்.ஏ.மோகன்குமார், ச.புவனேஸ்வரி, அ.பார்வதி, ஆர்.சேதுராமன், எஸ். மணிகண்டன், அன்புரோஸ், பூ.ஜெயவேல், ச.ஜெயராம்,

பகுதி அளவிலான அணிகளின் நிர்வாகிகள் கொடி. பாலா, இரா.மலர்விழி, ஆர். ரவிமூர்த்தி, ஆர்.சரவணன், டி. தினகர், தி.சத்தியேந்திரன், டி.குருமூர்த்தி, ஆர்.விமலநாதன், சபரி, ஆர்.குமார், ச.குப்புசாமி, பார்சன், லோகு, எஸ். எம் ஷேக்தாவூது, அ.தமிழரசன், ஜோ.சசிகுமார், கு.உதயசூரியன், கி.சிவப்பிரகாஷ், ஏ.முகமது, ரிஸ்வான், ஜெ. கௌசல்யா, தங்கம் செல்வராஜ், ஆட்டோ குமார், டி.ஏ.பீட்டர், ஜெ.மகேஸ்வரன், மு. செல்வம், மு.செந்தில்வேல், வ.கதிர்வேல், கோ.தனசேகரன், எம்.அருள், கொ.முத்துசாமி, மு.ராமு, பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ப. பரத்குமார், மே.குணா, பா. அருண்குமார், கோ.ராஜன், தி. கோகுலன், ராஜா சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் வருகிற 15ம் தேதிக்குள் கழக குடும்பத்தில் உள்ள அனைவரும் அவரவர் வீட்டில் கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி சிறப்பு செய்ய வேண்டும் எனவும் வருகிற 17 ம் தேதி சென்னை தெற்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழா மற்றும் கழக பவளவிழா மாநாட்டில் சைதை கிழக்கு பகுதியில் இருந்து ஐந்தாயிரம் கழகத்தினர்கள் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், வட்ட இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் செயல் வீரர்கள், வீராங்கனைகள் கழக உறுப்பினர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர், ஆர். அருணகிரி நன்றி கூறினார்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (14.9.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடத்தப்பட்ட

# கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு - 50 அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்!

## தயாநிதி மாறன் எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி சிறப்புரை!

காஞ்சிபுரம், செப்.15-

காஞ்சி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் அய்யப்பன் தாங்கலில் நடத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் 50 கிரிக்கெட் அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடத்தப்பட்ட மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை அளித்தல் மற்றும் 50 கிரிக்கெட் அணிகளுக்கு விலையில்லா விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா இன்று மாலை 4 மணியளவில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் அய்யப்பன் தாங்கல் ஊராட்சியில் உள்ள தெள்ளியார் அகரம் விளையாட்டு திடலில் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர். சாரதி பெரிய நாயகம் தலைமையில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் என்.என்.கதிரவன், சி.ரஞ்சித், த.பிரேம் பாலாஜி, தினேஷ் கந்தசாமி, விக்னேஷ் காளிதாஸ், சுகுணா, ம.ரேவதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் - கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் - குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு இம்மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்குகின்றனர். அத்துடன் 50 கிரிக்கெட் அணிகளுக்கு இலவச விளையாட்டு உபகரணங்களையும் வழங்குகின்றனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, கழக தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மாவட்டக் கழக நிர்வாகிகள் த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புசெழியன், க.அன்புசெல்வன், ஆதிமாறன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் எல்.கௌதமன், எஸ்.ஆர். பார்த்திபன், பைந்தமிழ் பாரி, வே.நம்பி, மு.வாசிம் ராஜா, நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், சுரேஷ் ஜெ. மனோகரன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.செல்வராஜ், இரா. பொன்னுராம், அ.தமிழ்மாறன், என்.நவீன், சாய் ஜெய் காந்த் பாரதி மற்றும் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் க.செந்தில் நன்றியுரையாற்றுகின்றார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ஆர்.சாரதி பெரியநாயகம் முன்னின்று செய்து வருகிறார்.

### ஃபார்முலா கார் பந்தயம் மூலமாக உலகப் புகழ் பெற்ற தீவுத்திடல் மைதானத்தில்

# வணிகப் பெருமக்கள் பொருட்காட்சிகளையும், மிகப் பெரிய நிகழ்ச்சிகளையும் நடத்தி பயன்பெற வேண்டும்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அழைப்பு!

சென்னை, செப்.15-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் நேற்று (14.9.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது -

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலை நோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டி யுள்ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத்துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் சென்னை தீவுத்திடலை சுற்றியுள்ள 3.5 கி.மீட்டர் நீள சாலைகளில் வெற்றிகரமாக நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயம் உலக அளவில் புகழ் பெற்றதோடு, நமது தீவுத்திடல் பொருட்காட்சி மைதானத்தை உலகறியச் செய்து விட்டது. ஃபார்முலா கார் பந்தயம் மூலமாக உலகப் புகழ் பெற்ற தீவுத்திடல் மைதானத்தில் வணிகப் பெருமக்கள் பொருட்காட்சிகளையும், மிகப் பெரிய நிகழ்ச்சி களையும் நடத்தி பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டார் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப் படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044 25333333, 04425333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.ச.கவிதா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் மாநகர 4 பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் அவைத் தலைவர் வ.அய்யாவு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மேயர் திருமதி.மகாலட்சுமி, மண்டலக்குழு தலைவர் எஸ். மோகன், பகுதி செயலாளர் சு.வெங்கடேசன், மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.